# பரம நம்பிக்கை

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் (சங். 143:10)

ஜெபம் பண்ணி விழித்திருங்கள்

ESTD. : 1978

மலர் - 8 மே – 2025 இதழ் 7


## கர்த்தர் முன்னே போய் தடைகளை நீக்குவார்!

(சகோதரி ரீட்டா ஏசாயா)

**ஏசாயா 52:12 - கர்த்தர் உங்கள் முன்னே போவார். இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார்.**

வாசக நேயர்களே! மீண்டுமாய் இவ்விதழ் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். இந்த மே மாதம் 15ம் தேதியோடு இந்த இலக்கிய ஊழியமானது நாற்பத்து எட்டு வருடங்களை நிறைவு செய்கிறது. தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

இந்த வருடத்திலே கர்த்தர் உங்கள் முன்னே போவார் என்ற வசனத்தை தியானித்து வருகிறோம். கர்த்தர் எவ்விதம் போராட்டங்களில் ஜெயம் கொடுக்கிறார் என்பதை கடந்த இதழிலே தியானித்தோம். ஜனவரி மாதம் கர்த்தர் இந்த வசனத்தைக் கொடுத்தவுடனே இந்த ஆண்டு எப்படியிருக்கப் போகிறதோ என்று சற்று கலங்கினேன். அதுபோலவே பலவிதமான பிரச்சனைகள் போராட்டங்கள் வந்தன. கர்த்தரோ கிருபையினால் காத்தார். கடந்த 22.4.25 அன்று அதிகாலையில் எதிர்பாராத விதமாக பாஸ்டர் அவர்கள் இம்மையை விட்டு கடந்து போய்விட்டார்கள். இது எங்களுக்கு மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் அழித்தது. அவர்கள் விட்டு சென்ற ஊழியங்களை எப்படி செய்வது, என்ன செய்வது என்றே புரியாமலிருக்கும் வேளையில் அநேக தேவ பிள்ளைகளின் ஆறுதலான வார்த்தைகள், ஜெபங்கள் எங்களை மீண்டுமாய் ஊழியங்களைச் செய்ய வைத்தது. கர்த்தரின் கிருபை தாங்கி வருகிறது. தொடர்ந்து எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த இதழிலே தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார். அவர்கள் தடைகளை நீக்கி வாசலாய் உட்பிரவேசித்துக் கடந்து போவார்கள். அவர்கள் இராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார். கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்து போவார். (மீகா. 2:13) என்ற வசனத்தை தியானிக்கப் போகிறோம். நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறி போகும்போது நாம் முன்னேற கூடாதபடிக்கு பிசாசு பலவிதமான போராட்டங்களை உருவாக்குவான். அவைகளை மேற்கொண்டு நாம் முன் செல்ல நம்முடைய ராஜா நமக்கு முன் செல்கிறார். இதை இஸ்ரவேல் புத்திரரின் கானான் பிரயாணத்தில் கர்த்தர் நடத்தின பாதைகளை தியானிப்போம். அது நம்முடைய ஆத்துமாவுக்குப் பிரயோஜனமாயிருக்கும்.

## வருந்துகிறோம்



தோற்றம் 21.06.1950 மறைவு 22.04.2025

போதகர் **ஆர். ஏசாயா** அவர்கள்,

பரம நம்பிக்கை ஊழியங்களின் மாத இதழின் ஆசிரியர் போதகர் ஆர். ஏசாயா அவர்கள், 22 ஏப்ரல் 2025 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். கடந்த 50 ஆண்டுகளாக அவர்கள் இந்த ஊழியத்தின் வழியாக ஆண்டவருக்காக உண்மையுடன் பணியாற்றி பல ஆத்துமாகளுக்கு ஆசீர்வாதமாக இருந்து வந்தார்கள். பரம நம்பிக்கை ஊழியங்கள் தொடர்ந்து நடைபெறும். இதற்கு பின் எங்களுடன் தொடர்பில் இருக்க மற்றும் காணிக்கைகள் அனுப்ப வேண்டிய முகவரி:


**Sis. Rita Isaiah,**
214/2, AVA Palace, Flat G1, VGN Padma Avenue, Kolapakkam, Chennai – 600128
Ph: 9384710267; 9789815830


தயவு கூர்ந்து பழைய முகவரியை இனி பயன்படுத்த வேண்டாம்.

உங்கள் ஜெபமும், ஆதரவும் எங்களுக்குத் தொடர்ந்து இருப்பதாக. கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

இஸ்ரவேல் புத்திரர் கானானை சுதந்தரிப்பதற்கு எப்படி பலவிதமான தடைகளைக் கடந்து போனார்களோ! அதுபோல பரம கானானை நோக்கி செல்லுகிற தேவ பிள்ளைகளாகிய நாமும் நமக்கு எதிரடையான தடைகளை நீக்கி எப்படி முன் செல்ல வேண்டும் என்பதை தியானிப்போம்.

**I. அமலேக்கியரை ஜெயித்தார்கள்** (யாத்.17:18–16)

இஸ்ரவேலர் கானானை நோக்கி பிரயாணப்பட்டு போய் கொண்டிருக்கும் போது; பலவிதமான கஷ்டத்தின் பாதையில் கடந்து சென்றார்கள். குடிக்கத் தண்ணீர் இல்லாமல், புசிக்க ஆகாரம் இல்லாமல் விசுவாசத்தோடு பிரயாணப்பட்டு போய் கொண்டிருக்கிறார்கள். அந்த வேளையில் அமலேக்கியர் வந்து யுத்தம் பண்ணுகிறார்கள். அப்பொழுது மோசே யோசுவாவை யுத்தம் பண்ண சொல்லிவிட்டு மலையுச்சியில் சென்று ஜனங்களுக்காக தன் கைகளை உயர்த்தி ஜெபிக்கிறான். ஊரும் ஆரோனும் அவன் கைகளைத் தாங்கினார்கள். யோசுவா அமலேக்கியரை ஜெயித்து இஸ்ரவேலரை பாதுகாத்தான்.

அருமையான தேவ பிள்ளைகளே! அமலேக்கு என்றால் அது நம்முடைய "மாம்சத்தைக்" குறிக்கிறது. தேவ பிள்ளைகள் மாம்சத்தை ஜெயிக்க வேண்டும். அதற்கு யோசுவாவைப் போன்ற யுத்த வீரரும், மோசேயைப் போன்ற ஜெபவீரரும் வேண்டும். அப்பொழுது தான் நாம் மாம்சத்தை ஜெயிக்க முடியும். அதற்கு தேவ பிள்ளைகள் நல்ல ஆவிக்குரிய சபையில் ஐக்கியமாயிருக்க வேண்டும். அங்கே நமக்காக ஜெபித்து மாம்சத்தை மேற்கொள்ளும் நல்ல போதனைகள் கொடுக்கப்படும். கலாத்தியர் 5:17ல் மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும்இச்சிக்கிறது என்றும் 5:24ல் கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக் கிறவர்கள் என்றும் பார்க்கிறோம். சிலுவையின் உபதேசம் ஆவிக்குரிய சபைகளில் தான் கிடைக்கும். அது கெட்டுப் போகிறவர்களுக்கு பைத்தியம். இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது (I கொரி 1:18) இப்படி நாம் மாம்சத்தை மேற்கொண்டு ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேற நம்முடைய ராஜா நமக்கு முன்னே போவார். அவர் நமக்கு ஜெயம் கொடுக்கிறவர்.

**II. யோர்தானைக்கடந்தார்கள் – (** யோசுவா 3:14–17)

அடுத்தப்படியாக, வனாந்திர வாழ்க்கையை கடந்து யோர்தானுக்கருகில் வந்தார்கள். யோர்தான் அறுப்புக் காலம் முழுவதும் கரை புரண்டுபோம். இதை எப்படிக் கடந்து அக்கரைப்படுவதென்பது இஸ்ரவேல் புத்திரருக்கு சவாலாக இருந்தது. செங்கடலைப் பிரித்த மோசேயும் இப்பொழுது இல்லை. யோசுவா தான் அவர்களை வழி நடத்தி வருகிறார். இப்பொழுதும் கர்த்தர் யோசுவாவோடு பேசுகிறார். ஜனங்களைப் பரிசுத்தப்படுத்த சொல்லுகிறார். அது போலவே ஜனங்கள் தங்களைப் பரிசுத்தப் படுத்தினார்கள். உடன் படிக்கைப் பெட்டியை சுமக்கிற ஆசாரியமுடைய உள்ளங்கால் அந்த யோர்தானில் பட்டவுடனே மேலிருந்து வந்த தண்ணீர் குவியலாக நின்றது. மறுபக்கத்து தண்ணீர் கடலுக்கு ஓடி சேர்ந்தது. தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொண்ட தேவ பிள்ளைகள் யோர்தானைக் கடந்தார்கள். உடன்படிக்கைப்பெட்டி இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் இயேசு நமக்கு முன்செல்லும் போது, கரைபுரண்டு ஓடுகிற யோர்தான் போன்ற பிரச்சனைகள் எதிர்கொண்டு வந்தாலும், நாம் நம்மைப் பரிசுத்தப்படுத்தி அவருக்குப் பின் செல்லும் போது, அவர் நம்மை ஜெயமாய் நடத்தி செல்வார். அவருக்கே மகிமையுண்டாவதாக.

**III. எரிகோ பட்டணம்** (யோசுவா.6:1–20)

கடைசியாக, இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து கானானுக்குள் பிரவேசிக்கச் செல்லும்போது எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது. ஒருவரும் வெளியே போகவும் இல்லை. ஒருவரும் உள்ளே வரவுமில்லை. இஸ்ரவேலருக்கு வழிவிடாதபடி எரிகோ பட்டிணம் தடையாக நின்றது. கர்த்தர் யோசுவாவோடு பேசினார். எரிகோவையும் அதின் இராஜாவையும், யுத்த மனுஷரையும் உன் கையில் ஒப்புக் கொடுத்தேன் என்றார். எரிகோவை எப்படி ஜெயிப்பது என்பதையும் கர்த்தர் அவர்களுக்கு விளக்கினார். அதுபோல ஆறு நாட்கள் பட்டணத்தை சத்தமில்லாமல் சுற்றினார்கள். ஏழாம் நாள் ஏழு முறை சுற்றினார்கள். கடைசியாக சுற்றும்போது எக்காளம் ஊதி ஆர்ப்பரித்தார்கள். பட்டணம் இடிந்து விழுந்தது. இங்கேயும் உடன்படிக்கைப் பெட்டியை சுமந்து கொண்டு சென்றவர்கள் எக்காளங்களை ஊதுகிற ஆசாரியருக்கு பின் சென்றார்கள். அவர்கள் துதிக்க ஆரம்பித்தவுடன் கோட்டை இடிந்து விழுந்தது.

அருமையாக தேவ பிள்ளைகளே! நாம் பரம கானானை சுதந்தரிக்கக் கூடாதபடிக்கு பிசாசு பலவிதமான போராட்டங்களை உருவாக்குவான். நாம் துதியினால் அவனுடைய கிரியைகளை அழிக்க முடியும். நாம் துதிக்க ஆரம்பிக்கும் போது கர்த்தர் நமக்கு முன் செல்லுகிறார் அவர் நிச்சயம் ஜெயம் கொடுப்பார். பவுலும் சீலாவும் சிறையில் அடைக்கப்பட்டு வேதனையோடு இருக்கும் வேளையில் அந்த இருட்டறையில் வேதனையின் உச்சக் கட்டத்தில் தேவனைத் துதித்துப் பாடினார்கள். கட்டுகள் அவிழ்ந்தது சிறையில் அற்புதம் நடந்தது. அதுபோல நம்முடைய வாழ்க்கையிலும் அற்புதங்கள் நடக்கும். நாம் இயேசுவை விசுவாசிப்போம் அவர் சபிக்கப்பட்ட சாபம் நிறைந்த பட்டணமாகிய எரிகோவை வீழ்த்துவார். நமக்கு ஜெயம் கொடுத்து முன்னேறி போகச்செய்வார்.

அருமையான தேவ பிள்ளைகளே! நாம் பரம கானானை சுதந்தரித்துக் கொள்ளக் கூடாதப்படிக்கு அநேக தடைகள் நமக்கு வரலாம். நம்முடைய மாம்சம் போராடும், யோர்தான் போன்ற சோதனைகள் நமக்கு விரோதமாய் போராடும். எரிகோ போன்ற பலமான கோட்டைக் கொத்தளங்கள் நமக்கு விரோதமாய் எழும்பி நிற்கும். எல்லாவற்றையும் ஜெயித்து நாம் முன்னேற கர்த்தர் நமக்கு முன்னே போகிறார். அவர் நமக்கு ஜெயம் கொடுத்து நாம் முன் செல்ல நமக்கு உதவி செய்வார். தேவன் தாமே உங்களை ஆசீர்வதித்து முன்னேற உதவி செய்வாராக!

# ஆசிரியர் கடிதம்

இனிய இயேசு கிறிஸ்துவுக்குள் அன்புள்ள பரமநம்பிக்கை பங்காளர்களே! உங்களுக்கு எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்!

நாம் நான்கு மாதத்தைக் கடந்து ஐந்தாம் மாதத்திற்குள் வர கர்த்தர் கிருபை கூர்ந்துள்ளார். நமது இலக்கிய ஊழியத்தில் இது நாம் கடக்கிற நாற்பத்தி எட்டாவது ஆண்டு!

பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலில் 1977 ஆம் ஆண்டு 15.05.1977 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டு பல நிலைகளில் பரிசுத்த ஆவியானவர் கிரியையின்படி பல ஆத்துமாக்களைத் தொட்ட ஊழியம்!

ஆரம்பத்தில் ஐந்நூறு (500) பத்திரிகைகளையே அச்சடித்து அனுப்ப முடிந்தது! பின்னர் பல ஆயிரங்களாக அச்சிட்டு அனுப்பினோம். இவ்வூழியத்தை ஆரம்பிக்க பரிசுத்தாவியானவர் சொன்னபோது தான், 'இது எனக்கு மிஞ்சினபாரம்' என்று பரிசுத்தாவியான வருக்கு கீழ்ப்படிய மறுத்தேன். அதனால் என் இருதயத்தில் சந்தோஷத்தையும் சமாதானத் தையும் இழந்தேன். இதை என் முகம் மற்றவர்களுக்கு காட்டிவிட்டது. இது சிலமணி நேரங்களில் நடக்க நான் பேருந்து பிரயாணத்தில் இருந்தேன். பின் இறங்கியவுடனே என்னை "ஏன் இப்படி உங்கள் முகம் துக்கமாயிருக்கிறது என்று விசாரித்த ஒருவர் "கர்த்தருக்கு ஸ்தோத்திரம் " என்று கூறி, "பத்து ரூபாயை கொடுத்து இதை உங்கள் இலக்கிய ஊழியத்திற்கு உபயோகப்படுத்துங்கள்" என்று கொடுத்தார். இன்றும் அவர் உயிரோடிருக்கிறார். இதுதான் இவ்வூழியத்தின் முதலீடு. தொடர்ந்து வாசகர்கள் பெருகினார்கள்!

இன்னும் அநேக ஆத்துமாக்கள் பிரயோஜனப்பட இந்த பத்திரிகைச் செய்திகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் புத்தகங்களாக வெளியிட்டு அநேக ஆத்துமாக்களுக்கு ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். சில எழுத்தாளர்களும் எங்கள் எட்டு பக்க (ஆறுபக்க தமிழ், இருபக்கம் ஆங்கிலம்) பத்திரிகையில் எழுத – இடங்கொடுக்க கர்த்தர் கிருபை செய்தார். விசுவாசிகளின் சுவிசேஷ ஐக்கியத்தில் கர்த்தருடைய ஊழிய அழைப்பில் இன்று, இந்த இலக்கிய ஊழியத்திலும் கர்த்தர் கிருபைதந்து பெருகப்பண்ணி ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண அற்புதமாக, ஆசீர்வதித்தார். ஆங்கில புத்தகங்கள் "டுலோஸ், லோகோஸ்" கப்பல்கள் வந்தபோது விநியோகம் செய்ய உதவியது!

தொடர்ந்து பரமநம்பிக்கை ஊழியம் மூலமாக வீடியோ இண்டர் நேஷனல் வேதகாமக் கல்லூரி நடத்தி முடித்து சில மாணவ, மாணவியரை கர்த்தருடைய பணியில் அனுப்ப கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உதவினார்.

இன்னும் பரிசுத்தாவியானவர் நடத்துதலின்படி, கர்த்தர் எங்களுக்குக் கொடுத்த பாடல்களை கேசட், **CD, VCD, DVD** இன்னும் **You Tube** மூலமாகவும் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணக் கிருபை செயதார். அத்துடன் பரிசுத்தாவியானவர் நடத்தியபடி சில மாதங்கள் தேவனுடைய செய்தியைக் கொடுத்து ஆத்துமாக்களை தேவனுடைய இராஜ்யத்தினராக மாற்ற கர்த்தர் உதவினார். இந்நாட்களில் பரம நம்பிக்கை ஊழியங்கள் சமய அறக்கட்டளையாக அரசாங்க பதிவு பெற்று ஓர் இடத்தையும் கர்த்தருடைய வழியில் பெற ஸ்தோத்திரத்துடன் கூடிய ஜெபத்துடன் முயற்சிக்கிறோம். உங்களுடைய ஜெபமும் எங்களுக்கு உதவியாயிருக்கிறது. நம்முடைய கிரியைகளுக்குப் பலனுண்டு. தொடர்ந்து ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்துடன் கிரியை செய்வோம்.

**இங்ஙனம்**
**கிறிஸ்துவுக்குள் அன்புடன் ஜெபிக்கும்**
**பாஸ்டர் R. ஏசாயா**

கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம் அன்பு வாசக நேயர்களே! நமது போதகர் பாஸ்டர் ஏசாயா அவர்களை கடந்த 22.4.25 அன்று கர்த்தர் நம்முடைய மகிமைக்குள் எடுத்துக்கொண்டார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த இலக்கிய ஊழியமானது தொடர்ந்து நடக்கும். அதற்காக வாசகர்களாகிய நீங்கள் பாரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள். "சிப்பியில் முத்து" விடைகளை அனுப்புகிற நேயர்கள் முன்பக்கத்தில் கண்ட விலாசத்துக்கு அனுப்புங்கள். விலாசம் மாறியிருப்பதை தயவு செய்து நினைவில் கொள்ளுங்கள். மேலும் எங்களைத் தொடர்புகொள்ள **Ph** : 9789815830, 9384710267 இந்த அலைபேசி எண்ணை உபயோகப்படுத்தவும்.

*Jesus Christ is coming very soon! Are you ready?*

PARAMA NAMBIKKAI

(Estd. 1978)

WATCH AND PRAY

Watch! Pray!! Be Holy!!!

APRIL - 2025

# GOD REMAINS THE SAME!

**But you remain the same, and your years will never end. - Psalm 102:27.**

Life is full of change. Some change is a natural part of life, like school starting in the fall or children growing up and moving out on their own. Other changes are much more unexpected and disruptive. Divorce, moving, the death of a loved one. We all can identify many ways our lives get changed. Because the one thing we can be sure of about life is that it will change. Change is Inevitable, but God is Constant. He remains the same.

Our Lord does not change. Everything on earth is liable to change: health gives place to sickness, pleasure to pain, plenty to poverty, love to enmity, honor to disgrace, strength to weakness, and life to death. Remember the days of darkness for they shall be many. But though all our circumstances and friends should change, there is one who never changes. He is in one mind and none can turn Him: with Him is no variableness. He is the same yesterday, today, and forever; and He is our best Friend, our nearest relation, our gracious Savior. His name is Jesus; His nature is love. His purpose is to do us good with His whole heart and soul. If we are walking humbly with Him, He will be our God, and we shall be His people. Let us cultivate intimacy with Him, dependence upon Him, concern to please Him, fear to offend Him, zeal to glorify Him.

The Psalmist is speaking of God, when he writes, but you remain the same. This speaks of the theological attribute known as the immutability of God, which is taught throughout the Bible. The immutability of God means that God is unchanging. More specifically, God is unchanging in His character, will, and covenant promises. God declares in Malachi 3:6, I the Lord do not change. Hebrews 13:8 proclaims that, Jesus Christ is the same yesterday and today and forever.Placing your hope on the things of this earth is a hazardous practice, simply because everything on the earth is temporary and is subject to change. Whether it is people, our environment, our careers, or even our own self, depending on the circumstances everything can change. The way we feel about something or someone today may not be how we feel tomorrow, despite our best intentions.

*Please 'Pray' for a permanent place in Mambalam for our Parama Nambikkai Ministries and obey as God says for this ministry to help us. You can download our messages every month through e-magazine from my website www.risaiah.com to show others as you are blessed.*

www.risaiah.com Pastor R. Isaiah

God does great things too marvelous to understand. He performs countless miracles. - (Job.9:10)

However, it is not this way with God, we can hope in Him because He doesn't change.

In a time when we have seen so much change and turmoil, the truth that God is unchanging provides us with great comfort. Not only is God faithful and consistent but He is going to continue to be around forever. We can trust God, in Him we have hope, He is able to change circumstances and situations and He is able to keep us while we grow and develop and step into our destiny. We can draw strength from God. He said that He would never fail us or forsake us.

God's nature is eternally consistent. He restores what was lost .His promises never fail. His word cannot be broken. Every promise will be fulfilled. Values and morals have certainly changed in our culture. Right is being called wrong and wrong is now called right. Proverbs 2:14 says that those who walk in darkness rejoice in doing evil and delight in the perverseness of evil. We're seeing Romans 1:32 lived out in our society as people even give approval to those who practice wicked deeds. With change as a constant in life, we need someone to hold on to who never changes.

God's Promises Never Change. The truth of God's unchangeability is seen very clearly in the life of Abraham even while he went through a lot of change. Abraham was given a promise and Genesis 15:6 tells us, And he believed the Lord, and he counted it to him as righteousness. Abraham believed against all hope. Abraham was fully convinced that God was able to do what he had promised. Abraham dialed in to the promise that God would never change what He had promised.

There are many changes on earth we may dread, but the certainty of a future in heaven with the King of kings is a change that fills us with glorious hope. As we go through life's transitions let us place our growing faith and steadfast hope in God's ever faithful care. In doing so His grace will sustain us and His Word will guide us throughout our life. Our God is the Unchanging Changer. He does not grow old, tired, or irrelevant. His promises do not expire, and His power does not diminish. Because He never changes, we can be confident that He can and will change our situations. Let us anchor our hope in Him and allow His unchanging nature to transform every changing and challenging area of our lives. Even when everything else around you fails, you can trust in the One who remains the same. – Amen.

**-Dr. S.Jehoashan Kingsly** Ph.D.,


## ATTENTION PLEASE

Your thanks giving testimonies, offerings, gifts, money orders are all welcomed, accepted and used for His Victorious ministry. Money may be sent through **net banking as in :**

**PARAMANAMBIKKAI MINISTRIES**
**(in India only)**
**CBS Code : 00073,**
**IFS Code: IDIB000A031**
**Current A/c. No.980288648**
**Indian Bank, Ashok Nagar, Chennai-83**

Or registered post in my address:

**Sis. Rita Isaiah**
214/2, AVA Palace, Flat G1,
VGN Padma Avenue, Kolapakkam,
Chennai – 600128
**Ph: 9384710267; 9789815830**
E-mail : isaiahr@hotmail.com
Fax : 91-044-24710267
**My website : www.risaiah.com**

# நற்கிரியை

## உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவார்!!!

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. கடந்த மாதம் முழுவதும் கண்மணி போல் காப்பாற்றினார். இந்த மாதத்தில் பரம நம்பிக்கை இதழின் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைக்கு நாம் பார்க்கப் போகிற தேவனுடைய வார்த்தை என்னவென்றால் "நற்கிரியை" பிலிப்பியர் 1:5 என்ற வசனத்தில் கூறியபடி, "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவார்"

நாம் கிறிஸ்துவின் நாமத்திலே இந்த உலகத்திற்கு நற்கிரியை செய்யும்படி அழைக்கப் பட்டிருக்கிறோம். நற்கிரியைகளை செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய சிருஷ்டியாய் இருக்கிறோம் என்று (எபேசி.2:10) அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்.

உலகம் தீய காரியங்களினால் நிரம்பியிருக்கிறது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற கொடூரமான செயல்களைச் செய்கிற மக்கள் மத்தியிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் கர்த்தரோ நம்மை இந்த உலகத்திற்கு உப்பாக, உலகத்திற்கு வெளிச்சமாக மட்டுமல்ல, உலகத்திற்கு நற்கிரியைகளைச் செய்கிறவர்களாக ஏற்படுத்தியிருக்கிறார். நாம் தேவனுடைய உன்னதமான அன்பை வெளிப்படுத்தும்படி அழைக்கப் பட்டவர்கள்.

"மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது" (மத்தேயு 5:15) என்று இயேசு கூறுகிறார்.

ஒரு காலத்தில் நீங்கள் துன்மார்க்கமாய் தேவனற்றவர்களாய் இருந்திருக்கலாம். ஆனால் கிறிஸ்துவுக்குள் வரும்போது புது சிருஷ்டிகளாய் இருக்கிறீர்கள். "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியா யிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின" (2 கொரி 5:17). கிறிஸ்து இந்த உலகத்திலிருந்த போது நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். (அப்.10:38) "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷகம் பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர் களுக்குக் காயங்கட்டு தலையும், சிறைப் பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த் தலையும் கூறவும்" என்று நற்கிரியைத்

தொடர்ந்து கொண்டே இருக்கின்றன (ஏசா.61:1–3).

சிலர் நற்கிரியைகள் செய்வதில் சோர்ந்துபோய் விடுவார்கள். மற்றவர்களுக்கு நற்கிரியைகள் செய்து யாருக்கு என்ன லாபம்? என்று நினைக்கிறீர்கள். தேவ பிள்ளைகளே, நற்கிரியைகளைச் செய்வது பதில் உபகாரத்தை எதிர்பார்த்து அல்ல, பதில் உபகாரம் நமக்கு நித்தியத்தில்தான் உண்டு. மத்தேயு 10:42 இல், "சீஷன் என்னும் நாமத்தினித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" ஆனால் நற்கிரியைகளைச் செய்யும் போது கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறோம். சுவிசேஷம் பரவுவதற்கு அது ஏதுவாயிருக்கிறது. ஆகவே "சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்வோம். மகிமையையும் கனத்தையும் அழியாமை யையும் தேடுகிறவர்களுக்கு அவர் நித்திய ஜீவனை அளிப்பார்" (ரோமர் 2:7).

தேவனுடைய பிள்ளைகள் நற்கிரியைகள் செய்வதில் மட்டுமல்ல, அதிலே பெருகவும் வேண்டும். மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரண முடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறாரே" என்று அப்.பவுல் கூறுகிறார். (2 கொரி.9:8). தேவனுடைய பிள்ளைகளே, உங்களுக்கு முன்பாக தேவையுள்ள மக்கள் பிரச்சனையிலே வாடுகிற மக்கள் எவ்வளவு ஆயிரம் பேர் இருக்கிறார்கள். உங்களுடைய நற்கிரியைகள் புண்பட்டவர்களுடைய உள்ளத்திற்கு கிலேயாத்தின் பிசின் தைலமாக விளங்குவதாக.

–மெர்ஸி கிங்ஸ்லி

**உங்கள் பிரயோஜனத்துக்காக யூடியூப் (You Tube) :-**
Paramanambikkai Messege
Paramanambikkai Songs
Paramanambikkai Ministries
**பாருங்கள்**

**இடத்திற்காக**

மாம்பலத்தில் பரம நம்பிக்கை ஊழியங் களுக்கான ஒரு நிரந்தர இடத்தைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரமாக தர, அதிசயம் நடக்க, தேவ நாமம் மகிமைப்பட, பரிசுத்தாவியானவர் ஜெயம் தர ஜெபித்துக் கொள்ளுங்கள். – **www.risaiah.com**

**<u>உங்கள் கவனத்திற்கு</u>**

உன்னதப்பாட்டு – விளக்கவுரை சகோதரி ரீட்டா ஏசாயா எழுதியதைக் கொண்டு பரிசுத்தாவி யானவர் கிரியை செய்து ஆத்துமாக்கள், சபைகள், தேவனுடைய நாளுக்கு ஆயத்தப்பட, நற்கிரியைகளைச் செய்ய ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள். புத்தகம் தேவைப்படுவோர் **Google** மூலம் **`Word of Christ'** விற்பனையாளரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாங்கி பயனடையுங்கள். அவர்களிடம் இருந்து மற்ற விற்பனையாளர்களும் வாங்கி விற்பார்கள், கிடைத்தால் பயன்பெறுங்கள். பரமநம்பிக்கை ஊழியங்களுக்காக, விசுவாசிகளின் சுவிசேஷ ஐக்கியத்திற்காக ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக்கொள்ளுங்கள்.

*www.risaiah.com மூலமாக அநேகர் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, புதுப் பிக்கப்பட (இரட்சிப்பு) இந்நாட்களில் "ஜெபியுங்கள்". நீங்களும் இந்நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ள இச்செய்தியை உங்களுக்கு பகிர்ந்துகொள்ளுகிறேன்!*

*-போதகர் ஆர்.ஏசாயா*

## சிப்பியில் முத்து

**கடந்த மாத சிப்பியில் உள்ள முத்துக்கள்:**

1. ஆகார் – ஆதி.21:15
2. யோசேப்பு – ஆதி. 49:22
3. பானபாத்திரக்காரரின் தலைவன் – ஆதி.40:9
4. மோசே – யாத். 3:4–10
5. முசுக்கட்டைச்செடி – II சாமு 3:24
6. சூரைச்செடி – I இரா.19:5
7. மனாசே – II நாளா 33:10
8. யோபு – யோபு.19:10
9. யோனா – யோனா 4:6
10. மிருதுச்செடி – சகரி. 1:8

**கடந்தமாத சிப்பியில் உள்ள முத்துக்களைச் சரியாக கண்டெடுத்தவர்கள்:**

1. சகோ. தங்கம் ஐசக் – வேலூர்
2. சகோ. ரதி ஜாய்ஸ் – கே.கே.நகர்
3. சகோ.சரோஜினி கோயில்பிச்சை – பாளையங்கோட்டை
4. சகோ. ரெஜினா வின்செண்ட் – பெங்களூர்
5. சகோ. ராதா – பெருமாள்புரம்
6. சகோ. பிரேமா ஜெயசேகர் – சென்னை
7. சகோ. புனிதா அசரியா – அண்ணா நகர்
8. சகோ. எஸ்தர் பானு – பொழிச்சலூர்
9. சகோ. லில்லி புஷ்பம் – மாம்பலம்
10. சகோ. மேரி புஷ்பம் – துரைபாக்கம்
11. சகோ. சிப்போராள் எபநேசர் – மாம்பலம்
12. சகோ. எசேக்கியேல் குமாரன் – புளியந்தோப்பு
13. சகோ. லிடியா – எம்.ஜி.ஆர்.நகர்
14. சகோ. எஸ்தர் டேவிட் – கொளத்தூர்
15. சகோ. சித்ரா – பெங்களூர்
16. சகோ. சுலோச்சனா – எம்.ஜி.ஆர்.நகர்
17. சகோ. இராஜகுமாரி – எம்.ஜி.ஆர்.நகர்
18. சகோ. ஷேரன் நிர்மல்குமார் – திருப்பத்தூர்
19. சகோ. எப்சி இம்மானுவேல் – எம்.ஜி.ஆர். நகர்
20. சகோ. ஜெபா பெனியேல் – எம்.ஜி.ஆர். நகர்
21. சகோ. அருணா – கே.கே. நகர்
22. சகோ. மார்கிரேட் ஜோ – கோவை

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டாக, சரியான முத்துக்களை முயற்சித்து எடுத்துத் தந்த உங்களுக்கு "வரிசை பிரகாரம் முதலில் பதில் அனுப்புபவர்கள் வரிசைப் படுத்தப்படுகிறீர்கள்", உங்களுக்கு எங்கள் அன்பான பாராட்டுக்கள்! சரியான முத்துக்களை எடுக்க முடியாதவர்களும் இவ்விதழிலே "முயற்சித்துப் பாருங்கள்." வெளிநாட்டு, உள்நாட்டு வாசகர்கள் முத்துக்களை isaiahr@hotmail.com இ-மெயிலிலும் அனுப்பலாம். ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் பதில் எழுதியனுப்பி எங்களை சந்தோஷப்படுத்துங்கள்.

### இம்மாத சிப்பிகள்

1. யாருக்குக் கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது ?
2. உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால் நீர் உமது அடியேனை விட்டுக் கடந்து போக வேண்டாம் என்றது யார் ?
3. நான் உம்முடைய கிருபையின் மேல் நம்பிக்கையாயிருக்கிறேன் என்றது யார் ?
4. கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும் என்றது யார் ?
5. பொய்யான மாயையைப் பற்றிக் கொண்டிருக்கிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறவர்கள் என்றது யார் ?
6. தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றது யார் ?
7. நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன் என்றது யார் ?
8. என் கிருபை உனக்குப் போதும் என்று கர்த்தர் யாரிடம் கூறினார் ?
9. உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள் என்றது யார் ?
10. தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார் என்றது யார் ?

குறிப்பு: உங்களுக்கு தெரிந்த மக்களுக்கு நமது பத்திரிகையை வாசிக்க, அறிமுகப்படுத்த எனது **www.risaiah.com "E-Magazine'** சென்று கீழ் இறக்கம் **(Down Load)** செய்து பெற்றுக் கொள்ளுமாறு தெரியப் படுத்துங்கள். அந்தந்த மாதத்திற்கு உரியது மட்டும் கீழ் இறக்கம் செய்யலாம் **(Download)** தொடர்ந்து எங்களுக்காக ஜெபியுங்கள். **ஆத்துமாக்கள் சாந்தி சமாதானம் அடைவார்களாக!** புதிய விலாசங்களை எங்களுக்கு தெரியபடுத்துங்கள்.

**PRINTED BOOK** Book-Post
(Private Circulation Only)

To

If undelivered return to :
**Parama Nambikkai**
P.B. No.3276, Chennai - 600 033, South India.

**காணிக்கை ரூ.50.00**

Printed by Mr. Devavaram, Meipporul Achakam, 278, K.H. Road, Ayanavaram, Chennai - 600 023.
Published and editored, Owned by Rev. R.Isaiah from at 23, Kodambakkam Road, West Mambalam, Chennai-33. for Paramanambikkai Ministries Trust.